සමාජ සවිබලගැන්වීම් හා සුභසාධන අමාත්‍යාංශය
சமூகவலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE

දිවිනැගුම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
வாழ்வின்எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
Department of Divineguma Development

4වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල.
4வதுமாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல
4th floor, Sethsiripaya ,Battaramulla

මගේ අංකය / எனது இல / My No: DDD/HO/04/ Circular /2016
ඔබේ අංකය / உமது இல / Your No: ..................
දිනය / திகதி / Date: 2016.03.31

**வாழ்வின் எழுச்சி சுற்றறிக்கை இலக்கம் :- 2016/3**

சகல மாவட்டச் செயலாளர்கள் / மாவட்ட வாழ்வின் எழுச்சி

மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி

சகல மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர்களுக்கு

## <u>வாழ்வின் எழுச்சி வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2016</u>

அரசாங்கத்தால் செயற்படுத்தப்படுகின்ற **“தார்மிக பொறுப்புள்ள கமத்தொழில், நோயற்ற மக்கள் ”** மற்றும், **“ சூழல் பாதுகாப்பு ”** ஆகிய வேலைத்திட்டங்களுடன் இணைந்ததாக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தினால் வாழ்வின் எழுச்சி வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் நாடு தழுவிய ரீதியில் கீழ் குறிப்பிடப்படும் வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1) பச்சை மரக்கறிவகைகள் / கீரைவகைகள் மற்றும் கிழங்கு வகைகளை பயிரிடும் வேலைத்திட்டங்கள் **(நச்சுப் பொருட்களற்ற கீரைகள் மற்றும் கிழங்கு வகைகள்)**

2) காடு வளர்ப்பு வேலைத்திடடம் **(சமுர்த்தி கானகம்)**

**1. பச்சை மரக்கறி/கீரைவகைகள் மற்றும் உள்ளூர் கிழங்கு வகைகளை பயிரிடும் வேலைத்திட்டம்.**

**1.1 அறிமுகம் :-**

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் அன்றாட உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் போது பொருளாதார ரீதியாக நிவாரணம் கிடைக்கின்ற பிரகாரமும் கூடிய போசனையினை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியவாறும் தனது வீட்டுத்தோட்டத்தில் தூய்மையான கீரைவகைகள் / பச்சை மரக்கறிவகைகள் மற்றும் உள்ளூர்க்கிழங்கு வகைகளை சேதனப் பசளையிட்டு பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் முறையே இதன் மூலம் எதிர்ப்பாக்கப்படுகின்றது. அதற்கமைய ஆகக் குறைந்தது கீரை வகைகள் / 05 பச்சை மரக்கறி வகைகள் மற்றும் உள்ளூர்க் கிழங்கு வகைகள் ஆகக் குறைந்தது 05 வகையாவது பயிரிடப்பட வேண்டும்.

අධ්‍යක්ෂ ජනරාල්
பணிப்பாளர் தலைமையதிபதி
Director General
011-2883802/2872202
Fax-011-2889002
dg@divineguma.gov.lk

අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල්
மேலதிகபணிப்பாளர்தலைமையதிபதி
Additional DirectorGeneral
011-2871672
Fax-011-2887280
adg@divineguma.gov.lk
anuradhakum@yahoo.com

අධ්‍යක්ෂ (පාලන)
பணிப்பாளர் (நிர்வாகம்)
Director (Administration)
011-2873799
Fax-011-2873996
diradmin@divineguma.gov.lk

ප්‍රධාන ගණකාධිකාරී
பிரதான கணக்காளர்
Chief Accountant
011-2869742
011-2869742
finance@divineguma.gov.lk

කාර්යාලය
அலுவலகம்
Office
011-2872202
**011-2887722**(Hotline)

**நோக்கம் : -**

1) போசனையுள்ள சமஅளவான மற்றும் நச்சுப்பொருட்களற்ற உணவைத் தனது வீட்டுத்தோட்டத்தில் இலகுவாகப் பெற்றுக்கொள்ளல்
2) குடும்பத்தின் உணவுக்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளைக் குறைத்தல்.

## 1.2. திட்டமிடல்

**1.2.1** இத்துடன் வழங்கப்பட்டுள்ள கருத்திட்ட அறிக்கைகளைப் (இணைப்பு இலக்கம் 01) பயன்படுத்தி ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிக்கும் திட்டமிடல் ஒன்றினை தயாரித்துக் கொள்ள வேண்டும். இங்கு கிராமம் ஒன்றிலிருந்து ஆகக் குறைந்தது ஐம்பது குடும்பங்களையாவது உட்படுத்திக் கொள்ளவேண்டும். கிராம மட்டத்தின் திட்டமிடலுடன் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் திட்டமிடலைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

**1.2.2** பச்சை மரக்கறி / கீரைவகைகளின் பொருட்டு நடுகைப் பொருட்களை பிரதேசத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டும். இதற்காக செலவுகளை மேற்கொள்ள முடியாது. (உதா: வல்லாரை, புதினாக் கீரை, கொத்த மல்லிக் கீரை, பொன்னாங்கன்னி , பசளிக் கீரை அசமோதகம் போன்ற பிரதேசத்துக்குப் பொருத்தமான எந்த வகையான கீரைவகைகளும் பச்சை மரக்கறி வகைகளும்.)

**1.2.3** பிரதேசத்துக்குப் பொருத்தமான உள்ளூர்க் கிழங்கு பயிர்ச்செய்கையின் பொருட்டு நடுகைப் பொருட்களை முடியுமான அளவிற்கு பெற்றுக் கொள்ள, பரிமாற்றம் செய்து கொள்வதற்கு நடவடிக்கைககளை மேற்கொள்ள வேண்டும். (உதா:- கருணைக்கிழங்கு, மரவள்ளி, வற்றாளை, இராசவள்ளிக் கிழங்கு, பாற் கிழங்கு, கொடிக் கிழங்கு , மஞ்சள் கிழங்கு போன்றவை) தேவைப்படுமிடத்து கொள்வனவுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ள முடியும். அங்கு விவசாய திணைகடகளத்தின் விலைமனுக்களை மீறிச்செல்லக்கூடாத பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**1.2.4** இப் பயிர்ச் செய்கையின் பொருட்டு சேதனப் பசளைகளை வீட்டுத் தோட்டத்திலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கு சிறியளவிலான அலகு ஒன்றினை உருவாக்கிக் கொள்ள திட்டமிடல் வேண்டும்.

**1.2.5** இவை தொடர்பில் விழிப்பூட்டுவதற்கான ஆலோசணைகள் 03 ஆம் இலக்க பொது ஆலோசணைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

**1.2.6** கருத்திட்ட பிரேரணையின் பொருட்டு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை அமைப்புகளின் பிரதிநிதிகளது, தொழில் நுட்ப/உதவிச் சேவைகளை வழங்கும் களத்துரை உத்தியோகத்தர்கள் உட்பட விவசாய ஆராய்ச்சி மற்றும் உதவியாளர்களின் ஒத்துழைப்பினையும் ஆலோசனையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## 1.3. செயற்படுத்தப்படும் முறைகள்

**1.3.1** வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் வலய முகாமையாளர் உட்பட கருத்திட்ட / தலைமையக முகாமையாளர்களின் சிபாரிசுடனும் பிரதேச செயலாளரின் அங்கீகாரத்துடனும் செயற்படுத்துதல் வேண்டும்.

**1.3.2** கீழே குறிப்பிடப்படும் காலவரையரைற்கேற்ப செயற்படுத்தப்படல் வேண்டும்.

**I.** விழிப்பூட்டல் மற்றும் திட்டமிடலைத் தயாரித்தல் - ஏப்ரல் 25 இற்கு முன்னர்.

| | | |
|---|---|---|
| **II.** கீரைவகைகள் / பச்சை மரக்கறி வகைகள் மற்றும் கிழங்கு வகைகளை பயிரிடல் | - | மார்ச் 31ம் திகதியிலிருந்து மே 05 |
| **III.** சேதனப் பசளை தயாரித்தல் | - | மார்ச் 31லிருந்து மே 31 வரை |
| **iv.** பயிர்ச் செய்கையினை தொடர்ச்சியாக நடாத்திச் செல்லல் | - | மார்ச் 31ம் திகதியிலிருந்து |
| **v.** முன்னேற்றத்தை அறிக்கையிடல் | - | 2016 ஏப்ரலிலிருந்து 2017 டிசம்பர் வரை |

## 2. காடு வளர்ப்பு வேலைத்திட்டம் (சமுர்த்தி காடு வளர்ப்பு)

### 2.1 அறிமுகம் :-

1881ம் ஆண்டின் **bluebook** அறிக்கைக்கமைய அப்போது இலங்கையின் மொத்த நிலப்பரப்பின் 84% மானவை காடுகளாகவே இருந்தது. இருப்பினும் பல்வேறு சூழல் மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக இது வரையில் காடுகளின் அளவானது மிக விரைவாகக் குறைந்துள்ளது. 2012 ஆண்டாகும் போது இப் பெறுமதியானது 29.45 ஆகும். ஆகையினால் நாட்டின் காடு வளர்ப்பினை வளரச் செய்யும் தேசிய தேவைப்பாட்டிற்கு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு இதன் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**நோக்கங்கள்**

1) சூழல் பாதுகாப்பிற்கு உயரிய பங்கினை வழங்குதல்.
2) மர மற்றும் உணவு உற்பத்தியின் ஊடாக பொருளாதார விருத்திக்கு பங்களிப்பினை வழங்குதல்.
3) காடு வளர்ப்பு மற்றும் சூழல் பாதுகாப்பு தொடர்பான மனப்பாங்கினை அபிவிருத்தி செய்தல் .
4) பயிர்ச் செய்கைகள் இல்லாத காணி வளங்களை பயனுள்ளவிதத்தில் பயன்படுத்திக்கொள்ளல்.

### 2.2 திட்டமிடுதல்.

**2.2.1** இத்துடன் வழங்கப்பட்டுள்ள கருத்திட்ட அறிக்கையினை **(இணைப்பு 02)** பிரயோகித்து ஒவ்வொரு கிராம உத்தியோத்தர்கள் பிரிவுக்கும் திட்டமிடல் ஒன்றினை தயாரித்துக் கொள்ளல் வேண்டும். இங்கு ஆகக் குறைந்தது 50 கன்றுகளாவது நடப்படல் வேண்டும். அத் திட்டமிடலை அடிப்படையாகக் கொண்டு பிரதேச செயலகப்பிரிவு மட்டத்தில் திட்டமிடலை தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

**2.2.2** பிரதேசத்தில் இயற்கையாக வளருகின்ற மரங்களை பெற்றுக் கொள்ளல். விதை நாற்று மேடைகளை ஏற்படுத்துவதன் ஊடாக நடுகைப் பொருட்களை பெற்றுக் கொள்ளல் வேண்டும். அத்தியாவசிய சந்தர்ப்பத்தில் கொள்வனவு செய்ய முடியும்.

**2.2.3** தெருக்கள், கடற்கரைகள், சமயத்தலங்கள், கற்கை நிலையங்கள் , நீர்ப்பாசனங்கள் போன்ற பொதுக் காணிகள் சார்ந்ததாக செயற்பாடுகள், சந்தர்ப்பங்கள் உட்படவும் குறைந்த வருமானம் பெறுவோறின் வீட்டுத் தோட்டங்கள் / காணிகளில் காடுவளர்ப்பினை மேம்படுத்த வேண்டியுள்ளது.

**2.2.4** இவை தொடர்பான விளக்கமளிப்பதற்கான ஆலோசணைகள் 3ம் இலக்க பொது ஆலோசணையின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**2.2.5.** கன்றுகளை நடுகை செய்யும் காணிகள், குறித்த தொழில் நுட்ப சேவைகளை வழங்குதல் போன்ற விடயங்களுக்குரிய பிற நிறுவனங்களினது உத்தியோகத்தர்களின் சிபாரிசுகளை கருத்திட்ட அறிக்கைக்கு பெற்றுக் கொள்ளவேண்டும்.

2.2.6 சமுர்தி சங்கங்கள், விவசாய அமைப்புகள் போன்ற சமுதாய அமைப்புகளின் சிபாரிசும் அத்தியாவசியமானதாகும்.

**2.3 செயற்படுத்தும் முறைகள்**

2.3.1 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை அமைப்பின் பிரதிநிதி ஒருவரது, கன்றுகளை நடுகைச் செய்வதற்குள்ள பொதுவான காணி சொந்தமான நிறுவனத்தின் உத்தியோகத்தர்களதும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சிபாரிசுடன் முன்னிலைப்படுத்துகின்ற கருத்திட்ட அறிக்கைக்கமைய பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் அறிக்கைகளை குறித்த வலய முகாமையாளர்களுக்கும் கருத்திட்ட/ தலைமையக முகாமையாளர்களின் சிபாரிசுடனும் பிரதேச செயலாளரின் அங்கீகாரத்துடனும் செயற்படுத்த வேண்டும்.

2.3.2 கன்றுகளை அரசாங்கத்தின் குறித்த நிறுவனங்களிலிருந்து இலகுவாக வரவழைத்துக்கொள்ள முடியுமாயின் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இங்கு அந்தந்த பிரதேச செயலகப் பிரிவிற்கு தேவைப்படக் கூடிய கன்றுகளின் எண்ணிக்கையை பெற்றுக்கொள்ளும் பொருட்டு பிரதேச செயலாளர் / வாழ்வின் எழுச்சி தலைமையக முகாமையாளர்களின் தலைமையில் குறித்த அரசாங்க / அரசாங்க நிர்வாகத்திலுள்ள நிறுவனங்களிடம் கலந்துரையாடி தீர்மானிப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

2.3.3 கன்றுகளை கொள்வனவு செய்ய வேண்டியேற்படின் அதற்குத் தேவையான கருத்திட்ட அறிக்கையின் மூலம் சிபார்சினைப் பெற்றுக்கொண்டு பிரதேச செயலாளர்களின் அங்கீகாரத்துடன் குறித்த பிரிவிற்கே கன்றுகளை வழங்கக்கூடிய பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

2.3.4 இங்கு விவசாய திணைக்களத்தின் விலை மனுக்களை அடிப்படையாகக் கொண்டு அதனை மீறாத விதத்தில் வாழ்வின் எழுச்சி பயனாளிகளின் நாற்று மேடைகளிலிருந்து கன்றுகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மெற்கொள்வதாயின் மிகப் பொருத்தமானதாக அமையும்.

**2.3.5 கால வரையறை**

| தொடர் இலக்கம் | விபரம் | காடு வளர்ப்பு வேலைத்திட்டம் | |
|---|---|---|---|
| | | ஈர/இடைப்பட்ட வலயம் | உலர் வலயம் |
| 1 | உத்தியோகத்தர்களை விளக்கமளித்தல் | மார்ச் 31 ஏப்ரல் 25 | மார்ச் 31 ஏப்ரல் 25 |
| 2 | பயனாளிகளை இனங்காண்பதும் விழிப்பூட்டுவதும் | மார்ச் 31 ஏப்ரல் 25 | மார்ச் 31 ஏப்ரல் 25 |
| 3 | கிராமிய மற்றும் பிரதேச திட்டமிடலை தயாரித்தல் | மார்ச் 31 ஏப்ரல் 30 | மார்ச் 31 ஏப்ரல் 30 |
| 4 | திட்டமிடலுக்கு அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளல் | மார்ச் 1 ஏப்ரல் 30 | மார்ச் 1 ஏப்ரல் 30 |
| 5 | நடுகைப் பொருட்களை பெற்றுக்கொள்ளல்/நாற்று மேடையிடல் | ஏப்ரல் 1 மே 10 | ஏப்ரல் 1 மே 10 |
| 6 | கன்று நடுதல், பாதுகாப்பான வேலி அமைத்தல் | ஏப்ரல் 1 மே 10 | ஏப்ரல் 1 மே 10 |
| 7 | தொடர்ச்சியாக பராமித்தல் | தொடர்ச்சியாக | |
| 8 | பின்பணி ஆய்வு/கண்காணிப்பு/ முன்னேற்றத்தினை அறிக்கையிடல் | 2016 ஏப்ரலிலிருந்து செப்டம்பர் | 2016 ஏப்ரலிலிருந்து 2017 செப்டம்பர் |

**3. பொதுவான ஆலோசணைகள்**

இந்த விடயங்கள் மேலே 1 மற்றும் 2 ஆகிய வேலைத்திட்டங்கள் இரண்டிற்கும் உரித்தாகும்.

1) மாவட்ட / பிரதேச ஒருங்கிணைப்புக் குழு மற்றும் விவசாயக்குழுக் கூட்டங்கள் உட்பட பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் நடைபெறுகின்ற பல்வேறு கூட்டங்களைப் பயன்படுத்தி உத்தியோகத்தர்களை விளக்கமளித்தல் வேண்டும்.
2) கிராமிய மட்டத்தில் சமய தலைவர்கள், உத்தியோகத்தர்கள், சமுதாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பயனாளிகளை விளக்கமளித்து மேற்படி இரு வேலைத்திட்டங்கள் இரண்டின் பொருட்டு தனித்தனியாக திட்டமிடவேண்டியுள்ளது. தேவைப்படின் மாத்திரம் இதற்கான கூட்டங்கள் ஒன்று அல்லது பலவற்றிற்கு ஒரு பிரிவுக்கு ரூபா 1000/ இற்கு மேற்படாதவாறு உபசரிப்பு உட்பட பிற செலவுகளை மேற்கொள்ள முடியம்.
3) விசேடமாக கீரைவகைகள் / பச்சை மரக்கறி பயிர்ச்செய்கைகள் மற்றும் தேசிய கிழங்கு பயிர்ச்செய்கைகளை தொடர்ச்சியாக அடுத்துவரும் ஆண்டிலும் பராமரித்துச் செல்ல ஆராய்ந்து பார்த்து சிறந்த பயனாளிகளை தெரிவு செய்து பரிசில்களை வழங்கி பாராட்ட உத்தேசித்துள்ளது. பாராட்டப்படுகின்ற சந்தர்ப்பத்தில் இந்த வேலைத்திட்டத்தோடு ஐம்பது குடும்பங்களாவது இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த பயனாளிகளை தெரிவு செய்வதற்கான எடுகோள்கள் குறித்த காலத்தில் தங்களுக்கு வழங்கப்படவுள்ளது.
4) இவ் வாண்டில் பயிர்ச்செய்கை மூலம் பெறப்படுகின்ற நடுகைப் பொருட்களை பயன்படுத்தி மீண்டும் பயிரிட்டுக் கொள்ளக்கூடிய பிரகாரம் இந்த பயிர்ச்செய்கைகளை பராமரித்துக் கொள்ளல் வேண்டும். காடு வளர்ப்பு கருத்திட்டத்தினையும் அவ்வாறு முன்வரும் வருடங்களிலும் பராமரித்துச் செல்லல் வேண்டும்.
5) மேற்படி வேலைத்திட்டங்கள் இரண்டிலும் வினைத்திறன் உட்பட மொத்த வாழ்வாதார அபிவிருத்திச் செயற்திறனை ஆராய்ந்து பார்த்து பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் சிறந்த கிராம உத்தியோகத்தர் பிரிவினை தெரிவு செய்து வாழ்வாதார அபிவிருத்திக்கு சிறந்த பங்களிப்பினை வழங்கியதற்காக அங்கு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பாராட்டுதலுக்குட்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்படவுள்ளது. இதற்கான எடுகோள்கள் உட்பட ஆலோசணைகள் அடுத்த ஆண்டில் வழங்கப்படவுள்ளது.

**4) நிதி ஒதுக்கீடும் நிர்வாகச் செலவுகளும்**

இந்த வேலைத்திட்டத்தினை செயற்படுத்தும் போது பிரதேச மட்டத்தில் அங்கீகரித்த கருத்திட்ட அ றிக்கைக்கேற்ப அத்தியாவசிய கொள்வனவுகளின் பொருட்டான கோரிக்கைகளை தங்களிடத்தே வரவழைத்து அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டினையும கட்டுநிதியினையும் குறித்த பிரதேச செயலாளருக்கு அனுப்புவது மிகப் பொருத்தமானதாகும். அதற்கமைய இதன் பொருட்டு மாவட்டத்திற்கு ஒதுக்கப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகள் அந்த பிரதேச செயலகப் பிரிவுகளில் திறமைகள் / தேவைப்பாடுகள் தொடர்பில் சிறந்த மீளாய்வு ஒன்றுடன் முகாமைத்துவம் செய்து கொள்ள எதிர்ப்பார்கப்படுகின்றது.

படிவ இலக்கம் 3ன் மூலம் தேவையான கட்டுநிதியினை பெற்றுக் கொள்வதற்காக தலைமைக் காரியாலயத்திற்கு கோரிக்கைகள் முன்வைத்தல் வேண்டும்.

மேற்கொள்ளப்படுகின்ற செலவில் 1.5%தை நிர்வாகச் செலவாக செலவலிக்க முடியும். அதில் 0.5% மாவட்ட செயலகத்துக்கும் 1% தை பிரதேச செயலகத்திற்கும் பிரிந்து செல்கின்ற பிரகாரம் அமைதல் வேண்டும்.

**5. நெறிப்படுத்தல் மற்றும் கண்காணிப்புச் செயற்பாடுகள்**

**5.1** இத்துடன் உள்ள முன்னேற்றப்படிவ இலக்கம் 1-1-மற்றும் 2-1 ஐப் பயன்படுத்தி வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் முன்னேற்றத்தினை வலய முகாமையாளர் ஊடாக கருத்திட்ட/தலைமையக முகாமையாளருக்கு மாதாந்தம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**5.2.** முன்னேற்றப்படிவ இலக்கம் 1-2 மற்றும் 2-2 ஐப் பயன்படுத்தி பிரதேச செயலகப் பிரிவின் முன்னேற்றத்தினை தலைமையக முகாமையாளரால் பிரதேச செயலாளர் மூலம் மாவட்ட செயலாளர் / மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளருக்கு அறிக்கையிடல் வேண்டும்.

**5.3.** முன்னேற்றப்படிவ இலக்கம் 1-3 , 2-3 மற்றும் 4 இன் மூலம் மாவட்ட மட்டத்தில் மாவட்ட முன்னேற்றத்தினை மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளரால் அடுத்து வரும் மாதத்தின் 2ஆதிகதிக்கு முன்னர் இத்திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

(**jeevanopaya@gmail.com** , divineguma@yahoo.com ) தொலைநகல் இலக்கம் **011 – 2872253, 011 - 2872201**

**5.4.** இந்த வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டஙகள் தொடர்பான தகவல்களை வாழ்வின் எழுச்சி செயற்றிட்டத்திலுள்ள (e-divineguma) கருத்திட்ட மற்றும் வேலைத்திட்ட முகாமைத்துவ மொடியூலில் உட்படுத்துவதற்கும் முன்னேற்றுத்தினை உரிய பிரகாரம் குறிப்பிட்ட நாளிலேயே முறைமைப்படுத்துவதற்கும் கருத்திட்ட முகாமையாளர் நடவடிகைகளை மேற்கொள்ள வேண்டும்

**5.5.** இந்த வேலைத்திட்டம் தொடர்பாக திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டு அவற்றின் அறிக்கைகளுக்கேற்ப நடவடிக்கைகளை மெற்கொள்வதற்கும் எதிர்காலத்தில் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் தொடர்பில் எனக்கு அறிக்கையிடுவதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல்வேண்டும். மேலும் சரியான முன்னேற்ற அறிக்கையினை பெற்றுக் கொள்வதும் முறைமைப்படுத்தி ஆவணப்படுத்திக் கொள்வதும் அடுத்துவரும் ஆண்டில் மேற்கொள்ளவுள்ளதனால் பரிசு வழஙகள் மற்றும் பாராட்டுகளுக்கு உட்படுத்தும் பொருட்டு இவை தேவைப்படும்.

இச்சுற்றறிக்கை தொடர்பில் மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொலைபேசி இலக்கங்கள் **011-2873801, 011 2869824** ஊடாக இவ்வலுவகத்தின் வாழ்வாதார அபிவிருத்தி பிரிவை தொடர்பு கொள்ளுமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன்.

**இந்த வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு தாங்கள் உட்பட உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்கின்ற ஒத்துழைப்பினை போற்றி மதிக்கின்றேன்.**

**சந்திரா விக்ரமசிங்ஹ**

**பணிப்பாளர் தலைமையதிபதி**

**பிரதிகள் : -**

Translated by:- M.M.M. Jawhar (Translator)

| | |
|---|---|
| 1.சமூக வலுவூட்டல்கள் மற்றும் நலனோம்புகை கௌரவ அமைச்சர் | |
| திரு.எஸ்.பி. திஸாநாயக்க அவர்கள் | த.கூ.க. பொருட்டு |
| 2.செயலாளர் - சமூக வலவூட்டல் மற்றும் நலநோம்புகை அமைச்சு | த.கூ.க. பொருட்டு |
| 3.செயலாளர் - விவசாய அமைச்சு | த.கூ.க. பொருட்டு |
| 4.செயலாளர் - மகாவலி மற்றும் சுற்றாடல் அமைச்சு | த.கூ.க. பொருட்டு |
| 5.செயலாளர் - பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | த.கூ.க. பொருட்டு |
| 6.மேலதிக செயலாளர் (கிராமிய அபிவிருத்தி) சமூக வலுவூட்டல்கள் | த.கூ.க. பொருட்டு |
| 7.மற்றும் நலநோம்புகை அமைச்சு | த.கூ.க. பொருட்டு |
| 8.கணக்காய்வுத் தலைமையதிபதி/கணக்காய்வுத் தலைமையதி திணைக்களம் | த.கூ.க. பொருட்டு |
| 9.பிரதம கணக்காளர், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் | த.கூ.க. பொருட்டும் உ.ந. பொருட்டும் |
| 10.சகல பிரிவுத் தலைவர்கள் - வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் உ.ந. பொருட்டும் | த.கூ.க. பொருட்டும் |
| 11.சகல பிரதேச செயலாளர்கள் உ.ந. பொருட்டும் | - த.கூ.க. பொருட்டும் |
| 12.சகல வாழ்வின் எழுச்சி தலைமையக முகாமையாளர்கள் | உ.ந. பொருட்டும் மற்றும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் மற்றும் வா.எ.அபி விருத்தி |

உத்தியோகத்தரகளை விளக்கமளிக்கும் பொருட்டும்.